செ.வெ.எண்:543 நாள்.1.7.2010

# பத்திரிக்கைச் செய்தி – 1.7. 2010

பெட்ரோலிய பொருட்களின் விலை உயர்வை கண்டித்தும் அதனை திரும்பப் பெற வேண்டும் என்று வலியுறுத்தியும் 5.7.2010 திங்கட் கிழமையன்று நடத்தவிருக்கும் நாடு தழுவிய வேலை நிறுத்த போராட்டத்தில் தமிழகத்தில் உள்ள சில அரசியல் கட்சிகள் பொது வேலை நிறுத்தத்தில் ஈடுபட உத்தேசித்துள்ளன.

இந்த அறிவிப்பினால் ஏற்படக் கூடிய சட்டம் மற்றும் ஒழுங்கு நிலைமைகள் குறித்து விவாதிப்பதற்காக ஓர் ஒருங்கிணைப்புக் கூட்டம் உள் துறை முதன்மைச் செயலாளர் அவர் தலைமையில் இன்று 1.7.2010ம் தேதி நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில், மாநில காவல் துறை இயக்குநர், சென்னை மாநகரம் மற்றும் சென்னை புற நகர் காவல் ஆணையர்கள் உள்ளிட்ட உயர் காவல் துறை அதிகாரிகள், தமிழ் நாடு மின்வாரியத் தலைவர், அரசுச் செயலாளர்கள், குடிமைப் பொருள் வழங்கல் ஆணையர் மற்றும் இதர அதிகாரிகள் பங்கேற்றனர்.

இக்கூட்டத்தில், மக்களின் அன்றாட வாழ்க்கை, போக்குவரத்து மற்றும் சட்டம் மற்றும் ஒழுங்கு ஆகியவை பராமரிக்கப்பட வேண்டும் என்றும், பொது மக்களுக்கோ மற்றும் பொதுச் சொத்திற்கோ பங்கம் விளைவிக்கும்வண்ணம் வன்முறையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சட்டம் ஒழுங்கை பாதுகாக்க மாவட்ட நிர்வாகத்திற்கும் மற்றும் காவல் துறை அதிகாரிகளுக்கும் ஏற்கனவே **இது குறித்து** ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

..2/-

குறிப்பாக, அத்தியாவசியத் தேவைகளான தொலைபேசி மற்றும் தொலைத் தொடர்பு, குடிநீர் வழங்கல், பால் விநியோகம், செய்தித் தாள் விநியோகம், மருத்துவமனைகள், தீயணைப்புத் துறை செயல்பாடுகள் தகுந்த பாதுகாப்புடன் பராமரிக்கப்பட வேண்டும்; முக்கிய கட்டமைப்புகளான, மின் நிலையங்கள், துணை மின் நிலையங்கள், அரசுக் கட்டடங்கள், தகவல் தொடர்பு நிலையங்கள், பாலங்கள், எண்ணெய் கிடங்குகள், இரயில்வே மேம்பாலங்கள் ஆகியவற்றிக்கு தகுந்த பாதுகாப்பு கொடுக்க வேண்டும்; மத்திய மற்றும் மாநில அரசு அலுவலகங்கள், கல்வி நிறுவனங்கள் தங்கு தடையின்றி செயல்படுவதற்கான தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும்; போக்குவரத்துத் துறை தங்கு தடையின்றி மக்கள் போக்குவரத்திற்கு பாதிப்பு இல்லாமல் தக்க ஏற்பாடுகள் மேற்கொள்ள வேண்டும் என்றும்; இதற்கு மாவட்ட நிர்வாகமும், காவல் துறையினரும் தகுந்த பாதுகாப்பு அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

முக்கிய இடங்களை உள்ளடக்கி விரிவான போலீஸ் ரோந்துப் பணிகள் ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், குடிநீர், பால் உள்ளிட்ட இதர அத்தியாவசியப் பொருட்களை தடையில்லாமல் விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும், உயர்நீதி மன்றம் மற்றும் இதர நீதிமன்றங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், பொது மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு குந்தகம் விளைவிப்போர்கள், பணிக்குச் செல்பவர்களை தடுப்பவர்கள், சட்ட விரோத நடவடிக்கைகளில் மற்றும் வன்முறை, நாச வேலை ஆகிய செயல்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் மீது தக்க நடவடிக்கைகளை எடுக்கவும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

..3/.

தேவையான இடங்களில் காவல் துறையினர் பாதுகாப்புக்கு நிறுத்தப்பட வேண்டுமென்றும், இரயில் நிலையங்கள், பேருந்து பணிமனைகள், முக்கிய சாலைகள், முக்கிய சந்திப்புகள், மருத்துவமனைகள், நீதிமன்றங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் அரசியல் கட்சிகளின் அலுவலகங்கள் ஆகியவைகளுக்கு காவல் துறையினர் தக்க பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சந்தைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள், வழிபாட்டுத் தலங்கள் ஆகியவற்றிக்கு போதிய பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், சந்தைகள் மற்றும் வர்த்தக நிறுவனங்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்றும், ஏதேனும் சம்பவங்கள் நடந்தால் சரியான நேரத்தில் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கும் வகையில், அனைத்து காவல் துறை கட்டுப்பாட்டு அறைகளும் தகுந்த முன்னேற்பாட்டுடன் இருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் காவல் துறை ஆணையர்களும் இதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள விரிவான அறிவுரைகள் வழங்கப்பட்டது.

1/7/10

3/3 உள் துறை முதன்மைச் செயலாளருக்காக

வெளியீடு, இயக்குநா,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9